# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

**புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

2019 செத்தெம்பரில் தயாரிப்பு நடவடிக்கைகள் மெதுவான வேகத்தில் விரிவடைந்து 54.7 சதவீதம் கொண்ட சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தன. இது 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 1.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்டதொரு வீழ்ச்சியாகும். தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணில் ஏற்பட்ட இம்மெதுவான போக்கிற்கு செத்தெம்பர் மாத காலப்பகுதியில் உற்பத்தியும் புதிய கட்டளைகளும் மெதுவடைந்தமையே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. உற்பத்தியில் மெதுவான போக்கு, குறிப்பாக, உணவு மற்றும் குடிபானங்களின் தயாரிப்பு மற்றும் புடைவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையில் அவதானிக்கப்பட்டது. புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்திகள் மெதுவான வேகத்தில் விரிவடைந்த போதும் எதிர்காலத்தில், குறிப்பாக, உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரிப்பிற்கு உயர்ந்த கேள்வி காணப்படும் என்ற எதிர்பார்ப்பின் காரணமாக கொள்வனவுகளின் இருப்பு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**54.7**


**2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 1.9 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

| மாறி | ஓகத். | செத். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| கொ.மு.சு | **56.6** | **54.7** | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 61.0 | 58.1 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 60.5 | 52.0 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 50.5 | 55.6 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 55.0 | 56.6 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 50.5 | 50.0 | - | நடுத்தரளவிலான கால நீடிப்பு |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதிய ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் காரணமாக தொழில்நிலையில் முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், நிரம்பலின் விநியோக நேரம் சமநிலை மட்டத்திற்கு மெதுவடைந்து விநியோக நேரம் முன்னைய மாதத்தினை ஒத்ததாகக் காணப்பட்டமையினை எடுத்துக்காட்டியது.

நடுநிலை மட்டத்தில் காணப்பட்ட நிரம்பலர் விநியோக நேரம் தவிர்ந்த கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் தயாரிப்பின் அனைத்து துணைச் சுட்டெண்களும் 50.0 தொடக்க அளவினை விஞ்சி (நடுநிலை) மீளாய்விற்குரிய காலப்பகுதியில் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை சமிக்ஞைப்படுத்தின.




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 ஓகத்திலிருந்தான 0.2 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்புடன் 2019 செத்தெம்பரில் 49.7 சதவீதம் கொண்ட பெறுமதியினைப் பதிவு செய்தது.

யூரோ வலயம், சிங்கப்பூர் மற்றும் ருஷியா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு 2019 செத்தெம்பரில் மெதுவடைந்தது. எனினும், ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் சீனாவின் தயாரிப்பு கொ.முசு மேம்பட்ட வேளையில் இந்தியாவின் கொ.மு.சு மாற்றமின்றிக் காணப்பட்டது.

*(மூலம்: மார்க்கிட்[1], ஒத்தோபர் 15, 2019 இல் உள்ளவாறு)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*


**2019 செத்தெம்பரில் பணிகள் துறை தொடர்ச்சியாக விரிவடைந்ததெனினும்** 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் மெதுவான வேகத்தில் காணப்பட்டமைக்கு வியாபார நடவடிக்கைகளில் காணப்பட்ட மெதுவான விரிவாக்கமே முக்கிய காரணமாகும்.

வியாபார நடவடிக்கையில் மெதுவான விரிவாக்கமே காணப்பட்ட போதும் புதிய வியாபாரங்களின் வளர்ச்சி 2019 செத்தெம்பரில் விரைந்த வேகத்தில் காணப்பட்டமையினை எடுத்துக்காட்டியது. இது, எதிர்காலத்தில் வியாபார நடவடிக்கைகள் வளர்ச்சியடைவதனை நோக்கி சாதகமான முறையில் பங்களிக்கும். தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணிகள்; நிதியியல் பணிகள் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகள் புதிய வியாபாரங்களின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. அதேவேளை, நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் செத்தெம்பரில் அதே மட்டத்தில் நிலையாகக் காணப்பட்டன. எனினும், சில பதிலிறுப்பாளர்கள் வியாபாரம் தொடர்பான அவர்களது சாதகமான எதிர்பார்ப்புக்கள் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்ட நிச்சயமற்ற வியாபார சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டிருப்பதனை எடுத்துக்காட்டுகின்றனர்.

**கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 52.7**

**2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 0.2 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | ஓகத். | செத். | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **52.9** | **52.7** | **-** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தல்** |
| கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய வியாபாரங்கள் | 52.7 | 55.0 | + | அதிகரிப்பு, உயர்ந்த வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 59.6 | 52.5 | - | அதிகரிப்பு, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.6 | 47.0 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தல் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 45.3 | 45.8 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தல் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்ப்புக்கள் | 63.4 | 63.4 | = | அதிகரிப்பு, அதே வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆட்சேர்ப்பு செய்யப்படாமையின் காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதில் காணப்பட்ட தாமதங்கள் மற்றும் தொழிற்படையில் காணப்பட்ட பொருத்தப்பாடற்ற தேர்ச்சி என்பனவற்றின் காரணமாக 2019 செத்தெம்பரில் தொடர்ந்தும் ஆறாவது மாதமாக தொழில்நிலையில் வீழ்ச்சி காணப்படுகிறது. நிலுவையிலுள்ள பணிகள் துணைச் சுட்டெண் தொடக்க மட்டமான 50.0 இற்குக் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு கேள்வியில் ஏற்படும் எந்தவொரு அதிகரிப்பும் பணிகள் வழங்குவோரின் ஏற்கனவேயுள்ள இயலாற்றலின் மூலம் ஈடுசெய்யப்படும் என்பதனைச் சுட்டுகிறது.

## உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு

உலகளாவிய பணிகள் கொ.மு.சு கடந்த மூன்றாண்டுகளுக்கும் மேலாக கூட்டாக நலிவடைந்து செத்தெம்பரில் 51.6 இற்குத் தளர்வடைந்தது.

யப்பான், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவின் பணிகள் கொ.மு.சு 2019 ஓகத்துடன் ஒப்பிடுகையில் செத்தெம்பரில் அவற்றின் பணிகள் துறைகள் மேம்பட்டமையை எடுத்துக்காட்டிய வேளையில் ஐக்கிய இராச்சியம் மற்றும் இந்தியா பணிகள் நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்றை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], ஒத்தோபர் 14, 2019 இல் உள்ளவாறு)*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.